தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1994, மார்ச் 25, வெள்ளிக்கிழமை.

பங்குனி 11, ஸ்ரீமுக–திருவள்ளுவர் ஆண்டு 2025

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"நாநலம் என்னும் நலன்உடைமை அந்நலம்
யாநலத்து உள்ளதூஉம் அன்று".

நாவன்மை என்று சிறப்பித்துச் சொல்லப்படும் நலம், ஒருவருக்கு உண்மையான உடைமையாகும். அந்நலம் பிற எல்லா நலன்களினுள்ளும் அடங்கிக் காணப்படுகின்ற ஒன்று அல்ல; அவற்றையெல்லாம்விட மேலான ஒன்று ஆகும்.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்–விடைகள். வினா எண் 81, திரு சி. குழந்தைவேலு, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

81 –

புதுக்கோட்டையில் குடும்ப வழக்குகளை விசாரிக்கத் தனி நீதிமன்றம் அமைத்தல்

*25320–**திரு. சி. குழந்தைவேலு :**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

புதுக்கோட்டையில் குடும்ப வழக்குகளை விசாரிக்க தனியாக குடும்ப நல நீதிமன்றம் அமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்டத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டையில் குடும்ப வழக்குகளை விசாரிக்க தனியாக குடும்ப நல நீதிமன்றம் (Family Court) அமைக்கும் கோரிக்கை ஏதும் பெறப்படாததால், அத்தகைய செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. சி. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை என்று சொல்லாது, வாரி வழங்கும் பாரிவள்ளல் இதயத் தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியில் புதுக்கோட்டை மாவட்டத்தில், புதுக்கோட்டையில் ஒரே ஒரு மாவட்ட நீதிபதி உள்ளார். அவர் மற்ற குற்றவியல், உரிமையியல் வழக்குகளை விசாரணை செய்வதால் குடும்ப நல வழக்குகளை விசாரிக்க அதிகமாக காலதாமதம் ஏற்படுகிறது. தற்சமயம், சிவில் உரிமையியல் சட்டத்தின்படி, மாவட்ட நீதிமன்றங்களில் விசாரிக்கப்பட்டு வருகிற வழக்குகள் காலதாமதம் ஆவதற்கு இதுவும் ஒரு காரணமாய் இருக்கிறது. ஆகவே, புதுக்கோட்டையில் தனியாக ஒரு குடும்ப நல நீதிமன்றம் அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குடும்ப நல நீதிமன்றம் அமைக்க வேண்டுமானால் மத்திய அரசின் சட்டப்படி, பேமிலி கோர்ட்ஸ் ஆக்ட் 1984–ன்படி, 10 லட்சம் மக்கள் கொண்ட நகரங்களில்தான் இந்த நீதிமன்றத்தை அமைக்க வேண்டுமென்று கெய்ட்லைன் இருக்கிறது. அப்படிப் பார்க்கிறபொழுது, புதுக்கோட்டையில் 10 லட்சம் மக்கள் இல்லாத காரணத்தினாலே அங்கே இந்த நீதிமன்றம் அமைக்க தற்போது வாய்ப்பு இல்லை.

திரு. சி. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்ப நல நீதிமன்றங்கள் மூலம் விசாரிக்க தனி சட்டம், வாய்ப்பு இருக்கிற நிலையில் குடும்ப நல வழக்குகளை சிவில் உரிமையியல் சட்டங்கள் மூலம் விசாரிப்பதால் காலதாமதம் ஆகிறது. ஆகவே, புதுக்கோட்டை சிறிய மாவட்டமாக இருந்தாலும் புதுக்கோட்டையையும் மனதில் கருதி, மாண்புமிகு இதயத் தெய்வம் ஆட்சியில் குடும்ப நல நீதிமன்றம் அமைக்க ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதிகளை நாம் மாற்ற முடியாது. ஆனால், துரிதமாக வழக்குகளுக்கு தீர்வுக் காண, டிஸ்ட்ரிக்ட் கோர்ட் அன்ட் சப்-கோர்ட்ஸ் ஆகிய நீதிமன்றங்களில் அதற்கான ஏற்பாடுகளை அரசு

1994 மார்ச் 25]

உயர் நீதிமன்றத்தைக் கலந்து ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 82, திருமதி இரா. பாண்டியம்மாள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

82–

உசிலம்பட்டி அரசு மருத்துவமனையை விரிவாக்கம் செய்தல்

*17544–**திருமதி இரா. பாண்டியம்மாள் :**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டி அரசு மருத்துவமனையை கூடுதல் வசதிகளுடன் விரிவாக்கம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடவடிக்கை எடுக்கப்படும்?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இதற்கான செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திருமதி இரா. பாண்டியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய அன்புத் தலைவி டாக்டர் புரட்சித் தலைவியின் பெயரால் வீர சபதம் ஏற்கும் இந்த நன்னாளில், புரட்சித் தலைவியின் வழி வந்த அமைச்சர் அவர்கள் இதை ஆம் என்று சொல்வார்கள் என்று நினைத்தேன். ஆனால் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். உசிலம்பட்டி பின்தங்கிய பகுதி. பின்தங்கிய மக்கள் வாழ்கின்ற அந்தப் பகுதியில் இருக்கிற மருத்துவமனை தாலுகா மருத்துவமனையாக இருக்கிறது. ஆகையால், உசிலம்பட்டி வளர்கின்ற ஒரு நகரமாக இருப்பதாலும், உசிலம்பட்டி மக்களும், பக்கத்திலுள்ள சேடப்பட்டி தொகுதியிலுள்ள மக்களும் அங்கே அதிகப்படியாக வருகின்ற காரணத்தினால் அங்கே பழமையான அந்த மருத்துவமனை மிகவும் பழுதடைந்த நிலையில் இருப்பதாலும், அங்கு படுக்கை வசதிகள் குறைவாக இருப்பதாலும், டாக்டர்கள் குறைவாக இருக்கின்றார்கள்.. எலக்ட்ரீசியன் கூட அங்கு இல்லையென்று நான் சென்றபொழுது சொன்னார்கள். ஆகையால், புரட்சித் தலைவியின் நல்லாட்சியில் அமைச்சர் அவர்கள் இதைத் தீர்க்க, மறுபரிசீலனை செய்து, மீண்டும் இதற்கு ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.